**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்**

முன்னிலை : **திரு. S. ஜோதிகைலாஷ், B.A.,B.L.,**

நீதித்துறை நடுவர், இரணியல் (கூ.மு.பொ)

**2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 22/2015**

## CASE SUMMARY

<table>
<tr><th>Sl.No.</th><th>Description</th><th colspan="3">Remarks</th></tr>
<tr><td>1</td><td>The period of remand of the accused</td><td colspan="3">Accused Remanded from : 25.11.2013<br>To : 28.11.2013</td></tr>
<tr><td>2</td><td>The date of filing of complaint/final report in the Court</td><td colspan="3">27.01.2015</td></tr>
<tr><td>3</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="3">N.A</td></tr>
<tr><td>4</td><td>The date of Questioning of accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be</td><td colspan="3">14.11.2024</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code.</td><td colspan="3">N.A</td></tr>
<tr><td rowspan="11">6</td><td rowspan="11">Date of examination in Chief and Cross - examination of a witness</td><td>Witness</td><td>Chief Examination</td><td>Cross-Examination</td></tr>
<tr><td>P.W.1</td><td>18.03.2025</td><td>18.03.2025</td></tr>
<tr><td>P.W.2</td><td>22.04.2025</td><td>--</td></tr>
<tr><td>P.W.3</td><td>22.04.2025</td><td>--</td></tr>
<tr><td>P.W.4</td><td>13.05.2025</td><td>--</td></tr>
<tr><td>P.W.5</td><td>20.05.2025</td><td>20.05.2025</td></tr>
<tr><td>P.W.6</td><td>09.09.2025</td><td>09.09.2025</td></tr>
<tr><td>P.W.7</td><td>09.09.2025</td><td>--</td></tr>
<tr><td>P.W.8</td><td>11.11.2025</td><td>20.05.2025</td></tr>
<tr><td>P.W.9</td><td>24.02.2026</td><td>24.02.2026</td></tr>
<tr><td>P.W.10</td><td>17.06.2026</td><td>17.06.2026</td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under</td><td colspan="3">30.06.2026</td></tr>
</table>



JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:05:22 +0530

| | | |
|---|---|---|
| | section 313(1)(b) of the Court | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Nil |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | N.A |

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>**கருங்கல்** காவல் நிலையம்,<br>குற்ற எண். **653/2013** | .......குற்றமுறையீட்டாளர், |
| / எதிர் / | |
| ததேயூஸ் வயது 38/2013<br>த/பெ. பெர்க்மான்ஸ்<br>11வது அன்பியம், மேல்மிடாலம் | ......... குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

இவ்வழக்கு 28.01.2015 அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு **16.07.2026** இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. T.J.புஷ்பதாஸ்** அவர்கள் ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **28.07.2026** ஆம் தேதி நீதிமன்றம் **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன்** கீழ் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

இந்த தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும் பதிவிடப்படுகின்றது.

**1. <u>அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-</u>**

கடந்த 03.11.2013 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் புகார்தாரர் டென்னீஸ் அவரது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரின்



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:05:27 +0530

வீட்டினுள் வந்து புகார்தாரரின் சட்டை பாக்கெட்டில் இருந்த ATM கார்டு மற்றும் பாக்கெட் டைரி ஆகியவற்றை திருடி எடுத்து சென்றதாகவும் 05.11.2013 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு கருங்கல் HDFC ATMல் இருந்து ரூபாய் 40,000/– நான்குமுறை போட்டு திருடி எடுத்து சென்ற குற்றம் புரிந்துள்ள குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கையானது இதச 1860 பிரிவுகள் 454, 380 ன் கீழ் தண்டிக்கத்தக்கவர்கள் என்று **குவிமுச 1973 பிரிவு 173(2)–ன்படி** குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **குவி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் நகல் வழங்குதல் –**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் **கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ்** இலவசமாக வழங்கப்பட்டது.

3. **கு.வி.மு.ச 1973பிரிவு 240(1) ன்கீழ் குற்றச்சாட்ட வனைதல் –**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச 1973பிரிவு **240(1) ன்கீழ்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச1860 சட்டப்பிரிவுகள் 454,380 ன்படி தனித்தனியே குற்றச்சாட்டு வனையப்பட்டது.

வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை **கு.வி.மு.ச 1973பிரிவு 240(2)** ன் படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் குற்றவாளி இல்லை எனக்கூறி குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு **கு.வி.மு.ச 1973 பிரிவு 242** ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**4. கு.வி.மு.ச 1973 பிரிவு 242ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:-**

அரசுத்தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.10** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.9** வரையிலுள்ள சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:05:33 +0530

**5. கு.வி.மு.ச 1973பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல் :**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் **கு.வி.மு.ச 1973பிரிவு 313 (1)(b)**ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர் தன் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தான் நிரபராதி என்றும், பதில் அளித்தார். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றார். எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் சாட்சியம் இல்லை என முடிக்கப்பட்டும் இருதரப்பு வாதுரைப்பும் கேட்கப்பட்டது.

**6.கு.வி–மு.ச 1973 பிரிவு 243ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது தரப்பில் சாட்சிகளும், சான்றாவணங்களும் இல்லை என்று கூறியதால் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்**

1) இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான **இ.த.ச 1860 பிரிவுகள் 454, 380**ன் கீழ் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை?

**பிரச்சனைக்கான தீர்வுகள்**

**சாட்சியங்களில்.......**

பாதிக்கப்பட்ட நபரான **அ.சா.1 டென்னீஸ்** தனது சாட்சியத்தில் தனது பாக்கெட்டில் இருந்த ATM கார்டு மற்றும் பாக்கெட் டைரி திருடு போயிருந்தது சம்மந்தமாககவும், காவல் நிலையத்தில் புகார்மனு கொடுத்தது சம்மந்தமாகவும் சாட்சியமளித்துள்ளார்.



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:05:40 +0530

ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான **அ.சா.2 அரிசந்திரன் மற்றும் அ.சா.3 ரெங்கத்துரை** ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும்அதில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்கள்.

பார்வை மகஜர் சாட்சிகளான **அ.சா.4 சுரேஷ்குமார் மற்றும் அ.சா.5 ராஜன்** ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் பார்வை மகசர் தொடர்பாக சாட்சியமளித்துள்ளார்கள்.

**சம்பவ சாட்சிகளான அ.சா.6 ரெங்கத்துரை, அ.சா.7 ராஜன்** ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் சம்பவம் சம்மந்தமாக சாட்சியமளித்துள்ளார்கள்.

**அ.சா.8 கோபிநாதன் சிறப்பு உதவி ஆய்வாளர்** தனது சாட்சியத்தில் அ.சா.1 கொடுத்த புகார்மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**புலனாய்வு**

**அ.சா.9 குமாரி சித்திரா, அ.சா.10 ரமேஷ் கண்ணன் உதவி ஆய்வாளர்கள் –** புலனாய்வு அதிகாரிகள் சாட்சியம் அளித்ததில் இருந்து மேற்படி புலனாய்வு அதிகாரி வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு புலனாய்வு செய்து இறுதி அறிக்கையை காலதாமதமில்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றம் புலனாய்வை பொறுத்தவரை புலனாய்வு அதிகாரி விசாரணையை சரியான கோணத்தில் விசாரணை செய்தாரா? என்பதை பார்க்கும்போது **அ.சா.1** முதல் **அ.சா.8** வரையான சாட்சியங்களில் **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)ன்** கீழ் முறையாக ஒரு புகார்மனு பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XII** ன் கீழ் முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர், வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதனை தொடர்ந்து வழக்கின் தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும் மேற்படி தடயப்பொருட்களை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் என்பது ஆவணங்களில் இருந்து தெரிய வருவதை வைத்து



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:05:45 +0530

இந்நீதிமன்றம் மேற்படி புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கினை சரியான கோணத்தில்தான் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**<u>இந்த வழக்கில் எடுத்தியம்பப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் மீதான ஆய்வு</u>**

ஒரு வழக்கின் துவக்கப்புள்ளி என்பது ஒரு சம்பவத்தினால் ஒரு நபர் பாதிப்படைந்து அந்த பாதிப்பின் வெளிப்பாடாக ஒரு புகார் தகவலாக பெறப்பட்டு அந்த தகவலானது வாக்குமூலமாக பெறப்பட்டு அதனை தொடர்ந்து மேற்படி சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் இதர சங்கதிகளை கொண்டே எழுகிறது.

இந்த வழக்கை பொருத்தவரை **இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 டென்னீஸ்** வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவர் பாக்கெட்டில் இருந்த ATM கார்டு மற்றும் பாக்கெட் டைரி ஆகியவற்றை திருடி, ATM கார்டு மூலம் அவரது வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 40,000/-ம் எடுத்தார் என்பதையும் அதனை தொடர்ந்து மேற்படி பொருளினை குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் இருந்து தகுந்த சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டதை நிரூபிக்கவேண்டும்.

திருட்டு சம்பந்தமான வழக்கை பொருத்தவரை வழக்கில் சூழ்நிலை சாட்சிகள் மற்றும் சந்தர்ப்ப சாட்சிகளை மட்டுமே வைத்து சங்கிலித்தொடர் தத்துவத்தை உறுதிப்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் இந்த வழக்கில் சூழ்நிலை சாட்சிகளின் அடிப்படையில் உருவாகும் சங்கிலி தொடர் தத்துவமானது பயன்பாட்டுக்கு வரும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**<u>இந்த வழக்கை பொறுத்தவரை சட்டப்பிரிவான</u>**

**<u>இதச 1860 பிரிவு 454-ஐ பொறுத்து</u>**

**முதலாவதாக -** குற்றம் சுமத்தப்பட்ட நபர் குற்றம் செய்யும் பொருட்டு பதுங்கி அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தாரா ?

**<u>இதச 1860 பிரிவு 380-ஐ பொறுத்து</u>**

**இரண்டாவதாக -** குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஏதேனும் ஒரு கட்டிடத்தில் அல்லது



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:05:51 +0530

வசிப்பிடத்தில் அல்லது கூடாரத்தில் திருட்டு எதையும் புரிந்தாரா?

போன்ற கூறுகளை ஆய்வு செய்தால் மட்டுமே இந்த வழக்கிற்கான பொருண்மைக்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**ஆய்வும் அதற்கான காரணமும்**

***மேற்சொன்ன இரண்டு வினாவிற்கான ஆய்வும் அதற்கான காரணமும்***

ஒரு வழக்கில் அரசுத்தரப்பு முதலில் புகார் அளித்தவரின் புகாரினை மெய்ப்பிக்கவேண்டும் பின்னர் இந்த வழக்கை பொறுத்தவரை அது தொடர்பான ஆவணங்களான **முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி, கைப்பற்றுதல் மகசர், தடயப்பொருட்கள்** ஆகியவற்றை இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும். இந்த வழக்கிலும் மேற்காணும் சங்கதிகள் தொடர்பான ஆவணங்களை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு **இந்திய சாட்சியச்சட்டம் 1872 பிரிவு 101 மற்றும் பிரிவு 3ன் கீழ்** அரசுத்தரப்பையே முழுவதுமாக சார்ந்துள்ளது.

**புகார்மனு குறித்து** .........

இவ்வழக்கில் அ.சா.ஆ.1ஆன புகார்மனு, அ.சா.1 டென்னிஸ் என்பவரால் 25.11.2013 ஆம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற நாள் 03.11.2013 ஆம் தேதி மாலை 04.00 மணி ஆகும். வழக்கு சம்பவம் நடைபெற்ற 22 நாள் கழித்து புகார்மனு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் குறித்து அ.சா.1 தனது சாட்சியத்தில்........

> ...... 03.11.2013 ஆம் தேதி மதியம் 04.00 மணி அளவில் நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். நான் எழுந்து பார்த்த போது என் பையில் இருந்த ஏ.டி.எம் கார்டு மற்றும் பாக்கெட் டயரியை காணவில்லை. அந்த பாக்கெட் டைரியில் ரகசிய எண் எழுதி வைத்திருந்தேன். 05.11.2013 அன்று நான் வங்கியில் சென்று ஏ.டி.எம் கார்டை காணவில்லை என்று கூறினேன். பாஸ்புக்கை ஒப்பன் செய்து பார்த்த போது 4 முறையாக



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:05:56 +0530

| |
|---|
| மொத்தம் 40,000/–ம் ரூபாய் எடுத்துள்ளது தெரிய வந்தது ........ |

என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது 03.11.2013 ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு தனது பாக்கெட்டில் இருந்த ATM கார்டு திருடு போயிருப்பது தெரிய வந்துள்ளது. 04.11.2013 ஆம் தேதியே வங்கிக்கு சென்று பார்த்திருக்க வேண்டும். ஆனால் அ.சா.1 05.11.2013 ஆம் தேதி வங்கிக்கு சென்று தனது பாஸ்புக்கை ஓப்பன் செய்து பார்த்த போது ரூபாய் 40,000/–ம் திருடு போயிருப்பது தெரிய வந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். 05.11.2013 ஆம் தேதி அ.சா.1க்கு தனது பணம் திருடு போயிருப்பது தெரிய வந்தும் அ.சா.1 25.11.2013 ஆம் தேதி தான் காவல் நிலையத்திற்கு சென்று புகார்மனு கொடுத்துள்ளார். ஏன் புகார்மனு கொடுக்க 20 நாள் காலதாமதம் ஆனது என்பது குறித்து அரசுத் தரப்பில் எந்தவித சாட்சிய சான்றாவணமும் சமர்பிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**<u>இவ்வழக்கின் குற்றச்சாட்டுகள் மீதான பரிசீலனை</u>**

**<u>இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 454 மற்றும் 380ன் கீழ்.......</u>**

இவ்வழக்கில் அ.சா.1 டென்னிஸ் வீட்டிற்குள் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நுழைந்து அவரது பாக்கெட்டில் இருந்த ATM கார்டு மற்றும் டைரி ஆகியவற்றை திருடி சென்றதாகவும், ATM கார்டை பயன்படுத்தி அ.சா.1ன் வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 40,000/–ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எடுத்தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தாரா என்பதை குறித்து பரிசீலனை செய்கையில், அ.சா.1 டென்னிஸ் தனது சாட்சியத்தில் "நான் எழுந்து பார்த்த போது என் பையில் இருந்த ஏ.டி.எம் கார்டு மற்றும் பாக்கெட் டயரியை காணவில்லை" என்று மட்டும் தான் சாட்சியம் அளித்துள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் தனது வீட்டிற்கு அத்துமீறி நுழைந்தார் என்று குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் சம்பவ சாட்சிகளாக செல்லப்பட்ட அ.சா.6 ரெங்கத்துரை, அ.சா.7



JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:06:24 +0530

ராஜன் இருவரும் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 சொல்லித் தான் தங்களுக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

மேலும், அ.சா.1 டென்னிஸ் என்பவரின் சட்டை பாக்கெட்டில் இருந்த ATM கார்டை குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் திருடி அ.சா.1 டென்னிஸ் வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 40,000/—த்தை திருடினாரா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 டென்னிஸ் தனது சாட்சியத்தில்..........

> ...... பாஸ்புக்கை ஒப்பன் செய்து பார்த்த போது 4 முறையாக மொத்தம் 40,000/—ம் எடுத்துள்ளது தெரிய வந்தது HDFC Bankல் CCTV Cameraவை பார்த்த போது மேல்மிடாலத்தை சார்ந்த ததேயூஸ் என்பவர் எடுத்ததாக தெரிய வந்தது ........

என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது இவ்வழக்கில் அ.சா.1 டென்னிஸ் என்பவரின் வங்கி கணக்கில் 03.11.2013 ஆம் தேதி எவ்வளவு பணம் இருந்தது என்பதும், 05.11.2013 ஆம் தேதி எவ்வளவு பணம் எடுக்கப்பட்டது என்பதற்கான வங்கி பாஸ்புக் புத்தகமோ அல்லது வங்கி ஸ்டேட்மென்டோ இவ்வழக்கில் ஏன் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு தாக்கல் செய்யப்படாத நிலையில் எவ்வாறு அ.சா.1ன் வங்கி கணக்கில் ரூபாய் 40,000/—ம் இருந்ததா என்பதே இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் நிலையில் உள்ளது.

மேலும், அ.சா.1ன் சாட்சியத்தில் CCTV கேமராவை பார்த்த போது தான் மேல்மிடாலத்தை சார்ந்த ததேயூஸ் என்பவர் எடுத்ததாக தெரிய வந்தது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த CCTV கேமராவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா.1ன் ATM கார்டை பயன்படுத்தி பணம் எடுத்த பதிவு பதிவாகியிருந்தால் அரசுத் தரப்பில் ஏன் அந்த பதிவுகளை C.D மூலமோ, Pendrive மூலமோ இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:06:47 +0530

<u>**ஒப்புதல் வாக்குமூலம் குறித்த பரிசீலனை**</u> .........

மேலும், **அ.சா. 9 புலன் விசாரணை அதிகாரி** தனது சாட்சியத்தில் அ.சா.2 ஹரிசந்திரன் மற்றும் அ.சா.3 ரெங்கத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 ஹரிசந்திரன் மற்றும் அ.சா.3 ரெங்கத்துரை ஆகியோர்களின் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது அ.சா.2 தனது சாட்சியத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தனக்கு தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெப்பம் தன்னுடையது இல்லை என்றும் அரசு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் 25.11.2013 ஆம் தேதி பகல் 01.00 மணிக்கு கருங்கல் காவல்நிலைய போலீசார் தெருவுக்கடைக்கு அடுத்த தட்டான்விளை ஸ்டாப்பில் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அதற்கு முன் டென்னிஸ் என்பவர் தன்னிடம் கருங்கல் ஸ்டேசனில் எடுத்துள்ளதாக தன்னிடம் தெரிவித்தார். வெளியே உள்ள கம்பியூட்டர் சென்டரில் போட்டு பார்த்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் இருந்தார் என்றும், தட்டான்விளை பஸ் ஸ்டாப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை பிடித்த போது பணம் எடுத்த ஆளாச்சே என்று பார்க்க சென்றதாகவும் அப்போது கையொப்பம் போட்டு கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 ரெங்கத்துரையின் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம் சுமத்தப்பட்ட நபரை பிடித்து விசாரிப்பதற்கு முன்பு அ.சா.1 தன்னிடம் சி.சி.டி.வி பதிவுகள் பற்றி சொன்னதாகவும், அதனை வைத்து தான் பணம் எடுத்த ஆளாச்சே என்று குற்றம் சுமத்தப்பட்ட நபரை கைது செய்யும் போது சென்று பார்த்ததாகவும் தான் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தன் முன்னிலையில் வைத்து தான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சாட்சியம் அளிக்கவில்லை.



JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:06:54 +0530

மேலும், ரெங்கத்துரை என்பவர் அ.சா.6 ஆக சம்பவ சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.6 சம்பவ சாட்சியாக சாட்சியம் அளிக்கும் போது 03.11.2013 ஆம் தேதி கருங்கல் அருகே உள்ள ATM கார்டில் உள்ள ரூபாயை குற்றம் சுமத்தப்பட்ட நபர் எடுத்துவிட்டதாக அ.சா.1 சொல்லியதன் மூலம் தான் தெரிந்துக் கொண்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார் ரெங்கத்துரை என்பவரை அரசுத் தரப்பில் சாட்சி பட்டியலில் சம்பவ சாட்சியாகவும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியாகவும் போட்டிருப்பதும், மேற்படி ரெங்கத்துரை அ.சா.3, அ.சா.6 ஆக அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டிருப்பதும் அவ்வாறு சாட்சியம் அளிக்கும் போது இரண்டு விதமாக சாட்சியம் அளித்திருப்பதையும் பார்க்கும் போது அ.சா.9, அ.சா.10 புலன்விசாரணை அதிகாரிகள் முறையாகதான் இந்த வழக்கை புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்று இந்நீதிமன்றத்திற்கு சாந்தேகம் எழுகிறது.

அ.சா.ஆ.7 ஆன ஒப்புதல் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அரிசந்திரன், ரெங்கத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் மேற்படி எதிரி எந்தவிதமான ஆசை வார்த்தைகளோ, அச்சுறுத்தலோ தூண்டுதலோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் என்று மட்டும் உள்ளது அதில் எந்த இடத்திலும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் பெயர் காணப்படவில்லை, மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் 3வது பக்கம் தொடங்கும் போது டென்னீஸ் ஒப்புதல் வாக்குமூலம் தெடர்ச்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வற்றை பார்க்கும் போது அ.சா.9 புலன்விசாரணை அதிகாரி அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் முன்னிலையில் எந்த நபரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார் என்று இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

மேற்படி சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது முதலில் அ.சா.1 டென்னீஸ் என்பவரின் வங்கி கணக்கில் ரூபாய் 40,000/-ம் இருந்ததா என்பதற்கான என்ற ஆவணமும் தாக்கல் செய்யப்படாததாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் அ.சா.1ன் வங்கி கணக்கில் இருந்த பணத்தை ATM சென்டரில் இருந்து எடுத்தார்



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:07:00 +0530

என்று CCTV காட்சி மூலம் தெரிய வந்தது என்று அரசுத் தரப்பில் தெரிவித்து இருந்தாலும், அதற்கான எந்த பதிவுகளையும் தாக்கல் செய்யாததாலும், ஒப்புதல் வாக்குமூலம் குறித்து அரசுத் தரப்பில் நிரூபிக்காததாலும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் மேற்படி குற்ற செயலில் ஈடுபட்டார் என்று அரசுத் தரப்பில் நிரூபிக்க தவறியதாலும், சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அளிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், இந்த வழக்கில் அரசுத்தரப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக கூறப்பட்டுள்ள **இ.த.ச** 1860 **பிரிவுகள் 454, 380**க்கான எந்தவித சாட்சியங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**தீர்வு:-**

**9. முடிவாக**, குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ததேயூஸ் த/பெ. பெர்க்மான்ஸ்** என்பவர் மீது **இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் 454 மற்றும் 380**ஐ பொறுத்து அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால், குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ததேயூஸ் த/பெ. பெர்க்மான்ஸ் என்பவரை** மேற்படி குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் **பிரிவு 248(1) ன்** படி வழக்கிலிருந்தும் **விடுதலை செய்தும்** தீர்ப்பளிக்கப்படுகிறது.

**10. கு.வி.முச 1973 பிரிவு 452ன் கீழ் உத்தரவு:-**

வழக்கில் ஆர்.பி.எண் 136/2014ல் உள்ள இரண்டு 500/- ரூபாய் நோட்டுகள் அ.சா.1 டென்னிஸ் பிணைமுறி எழுதிக் கொடுத்து பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி பணத்தை அவரே வைத்துக் கொள்ளவும், அவர் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்யப்படவும் கு.வி.முச 1973 பிரிவு 452ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

**11. கு.வி.முச 1973பிரிவு 357, 357-A ன் கீழ் உத்தரவு:-**

வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு கு.வி.முச 1973 பிரிவு 357, 357-A ன் கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.



JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:07:07 +0530

**12. கு.வி.மு.ச 1973  பிரிவு 437–A– ன் கீழ் பிணையப்பத்திரம் :-**

வழக்கில் **கு.வி.மு.ச 1973 பிரிவு 437–A–**ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணைப்பத்திரத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் .

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **(28.07.2026)**திறந்த இந்நீதிமன்றத்தில் தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:07:13 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல் **(கூ.மு.பொ)**

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | டென்னிஸ் | புகார்தாரர் |
| அ.சா.2 | ஹரிசந்திரன் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.3 | ரெங்கத்துரை | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.4 | சுரேஷ்குமார் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | ராஜன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | ரெங்கத்துரை | சம்பவ சாட்சி |
| அ.சா.7 | ராஜன் | சம்பவ சாட்சி |
| அ.சா.8 | கோபிநாதன் | காவல் அதிகாரி |
| அ.சா.9 | குமாரி சித்ரா | புலன்விசாரணை அதிகாரி |

| | | |
|---|---|---|
| அ.சா.10 | ரமேஷ் கண்ணன் | புலன்விசாரணை அதிகாரி |

**<u>அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.11.2013 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 25.11.2013 | ஒப்புதல் வாக்குமூலத்தின் உள்ள அ.சா.2ன் கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 25.11.2013 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 25.11.2013 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| அ.சா.ஆ.5 | 25.11.2013 | மாதிரி வரைபடம் | அ.சா.9 |
| அ.சா.ஆ.6 | 25.11.2013 | பார்வை மகஜர் | அ.சா.9 |
| அ.சா.ஆ.7 | 25.11.2013 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.9 |
| அ.சா.ஆ.8 | 25.11.2013 | அத்தாட்சி | அ.சா.9 |
| அ.சா.ஆ.9 | 25.11.2013 | படிவம் 91 | அ.சா.9 |

**அரசுத் தரப்பு சான்று பொருட்கள்** ***: இல்லை***

***குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில், சாட்சி, ஆவணம்*** *: இல்லை .*

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.28 18:07:19 +0530

நீதித்துறை நடுவர்

இரணியல் (கூ.மு.பொ)

Judicial Magistrate
Eraniel

Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date".